

# தி.மு.க. இளைஞர் அணி

## முத்தமிழறிஞர் கலைஞரின் பிறந்த நாள் & திராவிட மாடல் அரசின் நான்காண்டு சாதனை விளக்க தெருமுனைக் கூட்டங்கள்!

### தூத்துக்குடி தெற்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் பை.மூ.ராமஜெயம் அறிவிப்பு!

கழக இளைஞர் அணியின் மாவட்ட-மாநகர-மாநில அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின்படியும், கழக இளைஞர் அணிச் செயலாளர் மாண்புமிகு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் முரசொலியில் வெளியிட்ட அறிவிப்பின்படியும், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 102–வது பிறந்த நாளை முன்னிட்டு, தமிழர் நலன் காத்த அவரின் புகழ் பரப்பும் வகையிலும், கழகத் தலைவர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் தலைமையிலான திராவிட மாடல் அரசின் நான்காண்டு சாதனைகளை விளக்கியும், கழகப் பேச்சாளர்கள் மற்றும் இளம் பேச்சாளர்களைக் கொண்டு தெருமுனைக் கூட்டங்கள் நடைபெற்று வருகின்றன.

தூத்துக்குடி தெற்கு மாவட்டத்தில் உள்ள ஓட்டப்பிடாரம் மேற்கு ஒன்றியத்தில் தெருமுனைக் கூட்டம் முடிவடைந்துள்ள நிலையில், மற்ற ஒன்றிய–நகர–பகுதி–பேரூர்களில் நடைபெறும் தெருமுனைக் கூட்டங்களின் விவரம் வருமாறு :–

| வ. எண் | நாள் | ஒன்றியம் / நகரம் / பகுதி பேரூர் | இடம் | பேச்சாளர்கள் |
|---|---|---|---|---|
| 1 | 21.06.2025 | காயல்பட்டிணம் நகரம் | வள்ளல் சீதக்காதி திடல் | ச.த.பொன்னரசு இள.கார்த்திக் |
| 2 | | சாத்தான்குளம் தெற்கு ஒன்றியம் | பொத்தக்காலன்விளை | ஆத்தூர் வெ.பாலசுப்பிரமணியன் இ.அன்றோ வளர்பிரைட்டன் |
| 3 | | தூத்துக்குடி கிழக்கு ஒன்றியம் | சிலுவைப்பட்டி | செந்தூர் ஜெ.பாலகிருஷ்ணன் கோ.சண்முகநாராயணன் |
| 4 | | அன்னை இந்திரா நகர் பகுதி | வீட்டுவசதி குடியிருப்பு அருகில் | வே.குழந்தைவேல் மு.செந்தூர்பாண்டி |
| 5 | 22.06.2025 | உடன்குடி மேற்கு ஒன்றியம் | வேப்பங்காடு | செந்தூர் ஜெ.பாலகிருஷ்ணன் மு.செந்தூர்பாண்டி |
| 6 | | கருங்குளம் கிழக்கு ஒன்றியம் | கலியாவூர் | ச.த.பொன்னரசு இ.அன்றோ வளர்பிரைட்டன் |
| 7 | | தூத்துக்குடி மத்திய ஒன்றியம் | அய்யனார்குளம் | ஆத்தூர் வெ.பாலசுப்பிரமணியன் கோ.சண்முகநாராயணன் |
| 8 | 23.06.2025 | ஆழ்வார்திருநகரி மேற்கு ஒன்றியம் | ஆழ்வார்திருநகரி | ச.த.பொன்னரசு கோ.சண்முகநாராயணன் |
| 9 | | ஸ்பிக் நகர் பகுதி | ஸ்பிக் நகர் | செந்தூர் ஜெ.பாலகிருஷ்ணன் இ.அன்றோ வளர்பிரைட்டன் |
| 10 | 24.06.2025 | ஆழ்வார்திருநகரி மத்திய ஒன்றியம் | கே.வி.கே.சாமி சிலை அருகில், நாசரேத். | ச.த.பொன்னரசு கோ.சண்முகநாராயணன் |
| 11 | | சாத்தான்குளம் வடக்கு ஒன்றியம் | சுவாமி சன்னதி தெரு, சாத்தான்குளம். | செந்தூர் ஜெ.பாலகிருஷ்ணன் இள.கார்த்திக் |
| 12 | | ஓட்டப்பிடாரம் வடக்கு ஒன்றியம் | தருவைகுளம் | ஆத்தூர் வெ.பாலசுப்பிரமணியன் அன்றோ வளர்பிரைட்டன் |
| 13 | 25.06.2025 | திருச்செந்தூர் ஒன்றியம் | நா.முத்தையாபுரம் | ச.த.பொன்னரசு கோ.சண்முகநாராயணன் |
| 14 | | திருவைகுண்டம் மேற்கு ஒன்றியம் | அரசாழ்வார் கோவில் தெரு, திருவைகுண்டம். | வே.குழந்தைவேல் இ.அன்றோ வளர்பிரைட்டன் |
| 15 | | கருங்குளம் வடக்கு ஒன்றியம் | வல்லநாடு | செந்தூர் ஜெ.பாலகிருஷ்ணன் இள.கார்த்திக் |
| 16 | 26.06.2025 | திருச்செந்தூர் நகரம் | காமராஜர் சிலை பின்புறம், திருச்செந்தூர். | ஆத்தூர் வெ.பாலசுப்பிரமணியன் செ.சஞ்சய் |
| 17 | 28.06.2025 | ஆழ்வார்திருநகரி கிழக்கு ஒன்றியம் | சேதுக்குவாய்த்தான் | ச.த.பொன்னரசு கோ.சண்முகநாராயணன் |
| 18 | | திருவைகுண்டம் மத்திய ஒன்றியம் | பட்டாண்டிவிளை | செந்தூர் ஜெ.பாலகிருஷ்ணன் இ.அன்றோ வளர்பிரைட்டன் |
| 19 | | திருவைகுண்டம் கிழக்கு ஒன்றியம் | ஏரல் பஜார் | ஆத்தூர் வெ.பாலசுப்பிரமணியன் இ.அன்றோ வளர்பிரைட்டன் |
| 20 | | தூத்துக்குடி மேற்கு ஒன்றியம் | முடிவைத்தானேந்தல் | வே.குழந்தைவேல் மு.செந்தூர்பாண்டி |
| 21 | 29.06.2025 | ஆறுமுகநேரி பேரூர் | மெயின் பஜார், ஆறுமுகநேரி. | செந்தூர் ஜெ.பாலகிருஷ்ணன் இள.கார்த்திக் |
| 22 | | சாத்தான்குளம் மத்திய ஒன்றியம் | முதலூர் | செந்தூர் ஜெ.பாலகிருஷ்ணன் இள.கார்த்திக் |
| 23 | | கருங்குளம் தெற்கு ஒன்றியம் | தெற்கு காரசேரி | ச.த.பொன்னரசு கோ.சண்முகநாராயணன் |

**தூத்துக்குடி**

நாள் : 17-06-2025






# தி.மு.க. இளைஞர் அணி

## முத்தமிழறிஞர் கலைஞரின் பிறந்த நாள் & திராவிட மாடல் அரசின் நான்காண்டு சாதனை விளக்க தெருமுனைக் கூட்டங்கள்!


### தருமபுரி மேற்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஆர்.சிவகுரு அறிவிப்பு!

கழக இளைஞர் அணியின் மாவட்ட – மாநகர – மாநில அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின்படியும், கழக இளைஞர் அணிச் செயலாளர் மாண்புமிகு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் முரசொலியில் வெளியிட்ட அறிவிப்பின்படியும், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 102–வது பிறந்த நாளை முன்னிட்டு, தமிழர் நலன் காத்த அவரின் புகழ் பரப்பும் வகையிலும், கழகத் தலைவர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் தலைமையிலான திராவிட மாடல் அரசின் நான்காண்டு சாதனைகளை விளக்கியும், கழகப் பேச்சாளர்கள் மற்றும் இளம் பேச்சாளர்களைக் கொண்டு தெருமுனைக் கூட்டங்கள் நடைபெற்று வருகின்றன.

தருமபுரி மேற்கு மாவட்டத்தில் உள்ள தருமபுரி கிழக்கு, பாப்பிரெட்டிப்பட்டி மத்திய, அரூர் மேற்கு, அரூர் தெற்கு, காரிமங்கலம் மத்திய, பாப்பிரெட்டிப்பட்டி மேற்கு, கடத்தூர் மேற்கு, அரூர் கிழக்கு, அரூர் வடக்கு, பாலக்கோடு மேற்கு, மொரப்பூர் கிழக்கு, மொரப்பூர் மேற்கு, காரிமங்கலம் கிழக்கு, காரிமங்கலம் மேற்கு, தருமபுரி தெற்கு ஆகிய ஒன்றியங்களிலும், அரூர், காரிமங்கலம், பாப்பிரெட்டிப்பட்டி, கம்பைநல்லூர் ஆகிய பேரூர்களிலும் தெருமுனைக் கூட்டங்கள் முடிவடைந்துள்ள நிலையில், மற்ற ஒன்றிய–பேரூர்களில் நடைபெறும் தெருமுனைக் கூட்டங்களின் விவரம் வருமாறு :–

| வ. எண் | நாள் | ஒன்றியம் / பேரூர் | இடம் | பேச்சாளர்கள் |
|---|---|---|---|---|
| 1 | 19.06.2025 | பொ.மல்லாபுரம் பேரூர் | அண்ணா சிலை அருகில், பொம்மிடி. | ஜெ.எல்.அதியமான் த.தங்கமுத்து |

**தருமபுரி**

நாள் : 17-06-2025



## விருத்தாசலம் நகராட்சியில்

# காலனி என்ற பெயர் நீக்கப்பட்டு தெருக்களுக்கு பூக்கள், பழங்கள் பெயர்!

## நகர மன்றத் தலைவர் டாக்டர் சங்கவி முருகதாஸ் அறிவிப்பு

விருத்தாசலம், ஜூன் 19-

விருத்தாசலம் நகரமன்ற தலை வர் டாக்டர் சங்கவி முருகதாஸ் வெளி யிட்டுள்ள செய்திக்குறிப் பில் கூறியிருப்பதாவது: மண்ணின் பூர்வகுடிகளை அடிமையின் குறியீடாக வும், தீண்டாமையின் அடையா ளமாகவும் காலனி என்ற சொல் புழக்கத்தில் உள்ளது. சமூகத்தில் பல மாற்றங்கள் ஏற்பட்ட போதிலும், பல



தலைமுறைகள் கடந்தும் அவர்களை இழிவுபடுத்த இந்த சொல் பயன்பட்டு வந்துள்ளது.

இதை உணர்ந்து எல் லோருக்கும் எல்லாம் என்ற கோட்பாட்டோடு ஆட்சி நடத்தி வரும் முதல் அமைச் சர் மு.க.ஸ்டாலின், காலனி என்றசொல் அரசு ஆவணங் களில் இருந்து நீக்கப்படும் என அறிவித்துள்ளார். அந்த வகையில் விருத்தாசலம் நக ராட்சிக்கு உட்பட்ட பகுதி யில் காலனி என்ற பெய ரோடு இருக்கும் தெருக் க்களில் காலனி என்ற சொல் நீக்கப்பட்டு அதற்கு பதில் பூக்கள், பழங்கள் பெயர் வைக்கப்படும்.

மேலும் நகராட்சி அலு வல கத்தில் உள்ள கோப்பு களில் காலனி என்ற சொல் நீக்கப்படும். இதற்கான தீர் மானம் வருகிற நகர மன்ற கூட்டத்தில் நிறை வேற்றப் படும்.

இவ்வாறு அதில் கூறப் பட்டுள்ளது.

## தருமபுரி மாவட்டத்தில் தி.மு.க. ஆதிதிராவிடர் நலக்குழு சார்பில்

# கலைஞர் பிறந்த நாளையொட்டி மண்டல அளவிலான கருத்தரங்கக் கூட்டம்!

தருமபுரி, ஜூன் 19 -

தி.மு.க. ஆதிதிராவிடர் நலக்குழு சார்பில் முத்தமிழ றிஞர் கலைஞர் அவர்களின் 102வது பிறந்தநாளை முன் னிட்டு மண்டல அளவி லான மாபெரும் கருத்தரங் கக்கூட்டம் அரூர் என்.என். மஹால் திருமணமண்ட பத்தில் நடைபெற்றது.

இக்கூட்டத்திற்கு மாநில ஆதிதிராவிடர் நலக்குழு செயலாளர் ஏ.கிருஷ்ண சாமி எம்.எல்.ஏ. தலைமை வகித்தார். கழக துணைப் பொதுச் செயலாளர் அந்தி யூர்.செல்வராஜ் எம்.பி., கழக மாணவர் அணி செய லாளர் ஆர்.ராஜீவ்காந்தி, தருமபுரி மேற்கு மாவட்ட கழக செயலாளர் முனைவர் பி.பழனியப்பன், தருமபுரி கிழக்கு மாவட்ட பொறுப் பாளர் நாடாளுமன்ற உறுப் பினர் வழக்கறிஞர்.ஆ.மணி, கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட கழக செயலாளர் தே.மதியழகன் எம்.எல்.ஏ. ஆகியோர் சிறப்புரை ஆற்றி னர். மாவட்ட ஆதிதிராவிட நலக்குழு அமைப்பாளர் கே.திருமால் வரவேற்புரை யாற்றினார்.

மாநில நிர்வாகிகள் மரு தூர் ஏ.இராமலிங்கம், வி.பி. இராஜன், திப்பம்பட்டி ஆறுச்சாமி, செ.புஷ்பராஜ், சா.இராசேந்திரன்,பி. துரை சாமி, ஊட்டி மூ.பொன் தோஸ், மு.பரமானந்தம், மயிலை சி.தசரதன், S.மாரி யப்பன் கென்னடி,தகடூர் கொ.ரமேஷ் ஆகியோர் முன்னிலை வகித்தனர்நி

கழ்வில் தருமபுரி மேற்கு மாவட்ட அதிதிராவிடர் நலக்குழு நிர்வாகிகள் குபேந்திரன், கு.மதி, இரா. வேடன், மா.கணேசன், அ.சாமி, ப.முனிரத்தினம், கா.சரவணன், ப.ராமச்சந்தி ரன், சொ.பாண்டியன், தரு மபுரி கிழக்கு மாவட்ட ஆதி திராவிடர் நலக்குழு நிர்வாகிகள் டி.பி.சின்ன சாமி,என். பூபால், எஸ். ராஜேந்திரன், கே.வெங்க டாசலபதி, சி. பிரபு, அம் பேத்கர், ஆர்.வெங்கடே சன். ஐ.டி.விங் தமிழழகன் மற்றும் கழக மாநில, மாவட்ட, ஒன்றிய, பேரூர் கழக செயலாளர்கள், சார்பு அணி பொறுப்பாளர்கள் மற் றும் 2000க்கும் மேற்பட்ட தொண்டர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர். தருமபுரி கிழக்கு மாவட்ட ஆதிதிராவிடர் நலக்குழு நிர் வாகி என்.ஸ்டாலின் நன்றி தெரிவித்தார்.



கிருஷ்ணகிரி ஊராட்சி ஒன்றியம், காட்டிநாயனப்பள்ளி அங்கன்வாடி மையத்தில், ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி பணிகள் திட்டத்தின் கீழ் அங்கன்வாடி மைய முன்பருவக்கல்வி குழந்தைகளுக்கு சீருடைகளை மாவட்ட ஆட்சித்தலைவர் தினேஷ் குமார், கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டச் செயலாளர், சட்டமன்ற உறுப்பினர் தே.மதியழகன் ஆகியோர் வழங்கினார்கள். உடன் கிழக்கு ஒன்றியச் செயலாளர்கள் கோவிந்தன், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி திட்ட அலுவலர் ஜெயந்தி உள்ளிட்ட பலர் உள்ளனர்.